# பாடம் 8: நோவா
# (ஒரு குடும்பத்துடனான உடன்படிக்கை)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

அடிப்படை நிலை (7 வயது) : 1 முதல் 11 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : 1 முதல் 11 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : 1 முதல் 15 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், அலகையால் ஏமாற்றப்பட்டதன் விளைவாக மனிதர்கள் வீழ்ச்சியுற்றனர் என்பதை நாம் கற்றோம். நாம் கடவுளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, தொடக்கப் பாவம் என்ற பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ளோம். இந்த பாடத்தில், நமது பாவங்களில் இருந்து நம்மை விடுவிக்க எப்படி கடவுள் அனைத்தையும் திட்டமிட்டிருந்தார் என்பதைப் பற்றி நாம் கற்போம். கடவுள் தமது திட்டத்தைப் படிப்படியாக, தொடக்கத்தில் இருந்து நோவா என்று அழைக்கப்பட்ட ஒரு மனிதரின் குடும்பம் வரை செயல்படுத்தினார்.

**தற்போதைய பாடம்:**

1. விவிலியத்தில் இருந்து நோவாவின் கதையை (தொடக்க நூல் 6:6-9:17) வாசித்து மாணவர்களுக்கு விளக்கவும்.

2. உலகம் முழுவதையும் வன்முறையும் ஒழுக்கக்கேடுகளும் நிரப்பியிருந்த தமது காலத்தில் நோவா என்ற ஒரு மனிதர் தொடர்ந்து நேர்மையாளராக இருந்தார் (தொடக்க நூல் 6:5,9).

3. உலகளாவிய வெள்ளத்தின் வழியாக உலகின் கயமைகளுக்குத் தாம் முடிவுகட்டப் போவதாக கடவுள் நோவாவிடம் சொன்னார். தமது குடும்பத்தை வெள்ளத்தில் உயிர்பிழைக்க ஒரு பேழையைக் கட்டுமாறு நோவா அறிவுறுத்தப்பட்டார், மேலும் கடவுளுக்கு நோவா கீழ்ப்படிந்தார் (தொடக்க நூல் 6:22).

4. நோவா பேழையைக் கட்டிக் கொண்டிருந்த பொழுது, அவர் கடவுளின் வரவிருந்தத் தீர்ப்பு மற்றும் இரக்கத்தைப் பற்றி போதித்தார். ஆனால் மக்கள் அவரது எச்சரிக்கைகளைப் புறக்கணித்தனர், இறுதியில் வெள்ளம் அவர்களை மூழ்கடித்தது.

5. அனைத்து விதமான விலங்குகளோடும் பேழைக்குள் நுழைந்த நோவா மற்றும் அவரது மனைவி, அவரது மூன்று மகன்கள் மற்றும் அவர்களின் மனைவிகள் (மொத்தமாக எட்டு பேர்) வெள்ளத்தில் இருந்து காப்பாற்றப்பட்டனர்.

6. ஒருபோதும் இத்தகைய விதத்தில் தாம் மீண்டும் உலகை அழிக்கப் போவதில்லை என்று கடவுள் நோவாவிடம் வாக்களித்தார் (தொடக்க நூல் 9:15). நோவா மற்றும் அவரது வழித்தோன்றல்களோடு கடவுள் ஒரு புதிய என்றுமுள்ள உடன்படிக்கையை நிறுவினார், அது கடவுளின் வாக்குறுதியின் ஓர் அடையாளமாக வானவில்லை இணைத்ததாக இருந்தது (தொடக்க நூல் 9:1-17).

7. எவரும் அவர்களின் பாவத்தினால் அழிவதை கடவுள் விரும்புவதில்லை. மனிதர்களோடு நட்புறவோடு இருக்கவே கடவுள் விரும்புகிறார். ஆனால் அவருடனான நட்புறவு முறிவதற்கு பாவமே காரணமாக இருக்கிறது. நோவாவைப் போன்று, தம்மோடு நட்புறவு கொள்வதைத் தெரிவு செய்வோருடன் நடக்க கடவுள் எப்பொழுதும் ஆர்வமாக இருக்கிறார். அவர்களுடன் தமது உடன்படிக்கையைப் புதுப்பிப்பதன் வழியாக அவர் அவர்களைப் பாவ வெள்ளத்தில் இருந்து பாதுகாக்கிறார்.

8. ஆனால் மனிதர்களின் பாவமும் கிளர்ச்சியும் நோவாவின் தலைமுறையோடு முடிவுக்கு வரவில்லை. விவிலியத்தில் இருந்து பாபேல் கோபுரத்தின் கதையை (தொடக்க நூல் 11:1-9) வாசித்து மாணவர்களுக்கு விளக்கவும்.

நேவாவின் பேரப்பிள்ளைகளின் காலத்தில் மக்கள் மீண்டும் கடவுளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர் என்று நமக்கு சொல்லப்பட்டது. கிளர்ச்சியாளர்களாய் இருந்ததற்கும் மேலாக, அவர்கள் தங்களை தீயச் செயல்களில் ஒன்றிணைத்துக் கொண்டனர். அதன்

விளைவாக, கடவுள் எப்படி நோவாவின் வழித்தோன்றல்களைச் சிதறடித்து, அவர்கள் தங்கள் பாவத்தில் ஒன்றிணையாதவாறு அவர்களின் மொழிகளைப் பெருகச் செய்தார் என்று பாபேல் கோபுரத்தின் தொகைவு விவரிக்கிறது.

9. ஒரு கோபுரத்தைக் கட்டுவது தன்னிலே ஒரு பிரச்சனை இல்லை. அவர்களால் கட்டிய கோபுரத்தால் விண்ணகத்தில் உள்ள கடவுளை அடைய முடியும் என்ற சிந்தனையிலேயே மனிதர்களின் பாவம் இருந்தது. புனித அகுஸ்தீன், இதைப் படித்ததில், கடவுளை விட மிக உயர்ந்த ஒரு கோபுரம் இருந்தால் எதிர்கால வெள்ளத்தைத் தங்களால் தடுக்க முடியும் என்று அவர்கள் நினைத்ததில், தற்பெருமையைக் கண்டார் (யோவான் பற்றிய தெளிவுரைகள் 6.10.2).

இவ்விடத்தை பாபேல் என்று அழைக்கிற வசனம் முக்கியத்துவம் வாய்ந்தது. *பாபேல்* எனும் எபிரேய வார்த்தையின் பொருள் ''கடவுளின் வாயில்,'' அல்லது விரிவாக, ''விண்ணகத்தின் வாயில்'' என்பதாகும். அவர்கள் மெய்யாகவே என்ன செய்ய நோக்கம் கொண்டிருந்தனர் எனில் தங்களது சொந்த வலிமையில் விண்ணகத்திற்கும் கடவுளிடமும் ஏறிச்செல்ல வேண்டும். நினைவுகூருங்கள், ஆதாமும் ஏவாளும் கடவுளின் நிகழிருப்பில் தொடர்ந்து நீடித்திருக்க முடியாததால், அவர்கள் இன்பவனத்தில் இருந்து துரத்தப்பட்டனர். நாம் கடவுளின் நிகழிருப்பிற்குள் நமது சொந்த ஆற்றலால் உதவியற்று நடந்து செல்ல முடியும் என நாம் ஒருபோதும் சிந்திக்கக்கூடாது. கடவுளின் அருளே இதைச் செய்ய முடியும். நமது சொந்த ஆற்றலால் நாம் விண்ணகத்தை அடைய முடியாது.

10. விடயங்களை மோசமாக்கும் விதத்தில், அவர்கள் கூறினர், ''நமக்கென ஒரு பெயரை நாம் உருவாக்குவோம்''. தங்கள் சொந்த ஆற்றலால் விண்ணகத்தில் நுழைவதை மட்டும் அவர்கள் நாடவில்லை, மாறாக தங்களுக்கென ஒரு பெயரை உருவாக்கவும் விரும்பினர்.

நினைவுகூருங்கள், ஆதாம் அனைத்து விலங்குகளுக்கும் பெயரிட்டான் (தொடக்க நூல் 2), ஆனால் கடவுளே மனிதனுக்குப் பெயரிட்டார் (தொநூ 5:1). ஒன்றுக்குப் பெயரிடுவது என்பது அதன் மீது மேலாதிக்கம் கொண்டுள்ளதையும், அதன் சாரத்தில் சிலவற்றை அறிவதாயும் இருக்கிறது. பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிடுகின்றனர். பண்டைய உலகில், பெயரிடுதல் மிகவும் முக்கியமானதாக இருந்தது. இறுதியாக, கடவுளே நமக்குப் பெயரிட்டார். இவ்வாறு செய்ததில், அவர் நமது சாரத்தைப் பறைசாற்றுகிறார். இந்த பண்டைய உணர்வில், மனிதன் தனக்கென ''ஒரு பெயரை உருவாக்குவது'' தற்பெருமையாக இருக்கிறது. கடவுள் மட்டுமே மெய்யாக நமக்குப் பெயரிடவும், இழந்த மாட்சியை நமக்கு வழங்கவும் முடியும்.

11. பாபேல் கோபுரத்தைக் கட்டிய மனிதகுலம் கடவுளைத் தனது ஆதாரம் மற்றும் மையமாகக் கொள்ளாமல் தனது அதிகாரத்தை மையப்படுத்தவும் குவிக்கவும் விரும்பியது. தாம் உறுதியாக ஒருபோதும் மனிதர்களை அழிக்கப்போவதில்லை என்று நோவாவிடம் கடவுள் வாக்குறுதி அளித்திருந்ததால், மனிதர்கள் எவ்வளவு தீயவர்களாய் ஆக முடியும் என்பதற்கு வரம்புகளை நிர்ணயிக்க அவர் தீர்மானித்தார். ஆகவே, கடவுள் அவர்களின் பேச்சைக் குழப்பி, அவர்களை வெவ்வேறு திசைகளில் சிதறடித்தார். கயமையில் இந்த ஒற்றுமை உண்மையில் தீயதாக இருந்தது, மேலும் அவர்களைத் தன்னழிவில் இருந்து பாதுகாக்க கடவுள் அவர்களைப் பிரிந்துபோகச் செய்தார்.

*புனித எரோனிமுஸ்* (மறையுரைகள், 21): ''தூய மனிதர்கள் இணைந்து வாழும் பொழுது, அது ஒரு பேரருளாகவும் ஆசியாகவும் இருக்கிறது; ஆகவே அதைப்போல, பாவிகள் இணைந்து வசிக்கும் பொழுது அந்த குழுமம் மோசமானதாக இருக்கிறது. ஒரே நேரத்தில் அங்கு அதிக பாவிகள் இருந்தால், அவர்கள் மோசமானவர்களாக இருக்கிறார்கள்! உண்மையில், அந்த கோபுரம் கடவுளுக்கு எதிராகக் கட்டியெழுப்பப்பட்ட பொழுது, அதைக் கட்டியவர்கள் தங்கள் சொந்த நலனுக்காகப் பிரிந்து சென்றனர். இந்த சூழ்ச்சி தீமையாக இருந்தது. இந்த கலைதல் கலைந்து சென்றவர்களுக்கும் உண்மையாகப் பயனுள்ளதாக இருந்தது.''

12. நோவா மற்றும் வெள்ளத்தின் தொகைவு குறித்து, மண்ணகம் முழுவதையும் வெள்ளம் சூழ்வது சாத்தியமா என்று சில நவீனத் திறனாய்வர்கள் கேள்வி எழுப்புகின்றனர். மண்ணகம் முழுவதும் ஒருபோதும் முன்னர் வெள்ளத்தில் மூழ்கியதற்கான எந்த சான்றும் இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர். நோவாவின் கதை அதிகமாக, கில்காமேஷ் எனப்படும் பாபிலோனின் முற்கால புராணத்தின் மறுகூறல் போன்று தொனிக்கிறது என்று கூறுவோரும் இருக்கின்றனர், அதில் மண்ணகத்தில் வெள்ளத்தை ஏற்படுத்திய தெய்வங்களின் பேரவை, விலங்குகளைச்

சேகரித்து ஒரு கனசதுர வடிவப் படகில் ஏற்றி அனுப்ப ஒரு மனிதனை (உத்னாபிஷ்திம்) தேர்ந்தெடுத்தது. நோவா செய்தது போன்றே, வெள்ளத்திற்குப் பிறகு, உத்னாபிஷ்திம் நிலத்தைக் கண்டுபிடிக்க ஒரு பறவையை அனுப்புகிறான், மேலும் தெய்வங்களுக்கு பலி செலுத்துகிறான்.

நோவாவின் கதையை அப்படியே உலகளாவிய வெள்ளமாக விளக்குவது திருச்சபைக்குத் தேவையில்லை. கதையில் விவரிக்கப்படும் விதத்தில் நோவாவையும் அவரது குடும்பத்தையும் கடவுள் பயன்படுத்தினார் என்பதை வாசகர் அப்படியே நம்ப வேண்டியத் தேவையில்லை என்றாலும், நோவா என்ற மனிதர் உண்மையில் இருந்தார் (எபிரேயர் 11:7-8; 1 பேதுரு 3:18-21; 2 பேதுரு 2:4-5,9). மற்ற ''தெய்வங்கள்'' மீது படைப்பாளரான கடவுளின் மேலாதிக்கத்தை வெளிக்காட்ட, தொடக்க நூலை எழுதியவர் பாபிலோனிய நிகழ்வுரையை பயன்படுத்தியிருக்க மிகுந்த சாத்தியமுள்ளது, ஏனெனில் கில்காமேஷ் புராணத்தின் தெய்வங்கள் வெள்ளத்தைக் கண்டு பயந்து உயர்ந்த நிலத்திற்கு ஓடின, இங்கோ மறைநூலின் கடவுள் வெள்ளத்தின் மீது முழு கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளார். ''நமது மீட்புக்கு அடிப்படையான முதன்மை உண்மைகளைக் கூறவும், மனித இனம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் தொடக்கத்தின் புகழ்பெற்ற விவரிப்பை வழங்கவும், சிறிதே பண்பட்ட மக்களின் மனநிலைக்குத் தகுந்த எளிய மற்றும் உருவக மொழியை'' (மனித இனம், 38) மறைநூல் நிலையாகப் பயன்படுத்துகிறது என்று திருத்தந்தை 12-ம் பயஸ் கூறுகிறார்.

13. இந்த நோவாவின் தொகைவை புரிந்துகொள்ளத் திருச்சபை ஒரு சிறப்பான வழியையும் கொண்டுள்ளது. இந்த தொகைவில் உள்ள கூறுகள் எதிர்காலத்திற்கான சிலவற்றைச் சுட்டிக் காட்டுகின்றன:

கதிம 845: ''வெள்ளத்தில் இருந்து தான் மட்டும் காப்பாற்றப்பட்ட நோவாவின் பேழை [திருச்சபையின்] முன்னுருவாக இருக்கிறது.''

கதிம 1094: ''… வெள்ளமும் நோவாவின் பேழையும் திருமுழுக்கால் பெறுகின்ற மீட்பின் முன்னுரு ஆகும்.''

14. கடவுள் உண்மையாகவே மனிதகுலத்தைப் படைத்ததற்காக மனம் வருந்தியது போன்ற தோற்றத்தை நோவாவின் கதை ஏற்படுத்துகிறது. எனினும், கடவுள் எந்த முடிவையும் நிறைவாக எடுக்கிறார் என்பதால், அவர் தமது செயல்கள் மற்றும் முடிவுகளுக்காக மனம் வருந்தமாட்டார் என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம். மறைநூல் எழுத்தாளர்கள் எளிய சிந்தனை உள்ள தங்கள் காலத்து வாசகர்களுக்கு ஒரு கருத்தைக் கொண்டு சேர்ப்பதற்காக, கடவுளை மனிதரைப் போன்று காட்டும் விதத்தில் (இது ''மனிதவடிவாக்கம்'' எனப்படுகிறது) தொடர்ந்து எழுதினர்.

நோவா கதையின் முக்கியச் சொற்றொடராக இருக்கிறது தொடக்க நூல் 6:6: ''மனிதர்களை மண்ணகத்தில் உருவாக்கியதற்காக யாவே வருந்தினார், இதயத்தில் துயருற்றார்.'' பண்டைய யூதப் பண்பாட்டில், இதயம் உணர்ச்சியின் இடமாக அன்று, மாறாக, சிந்தனை மற்றும் தீர்ப்பின் இடமாகப் புரிந்துகொள்ளப்பட்டது. கடவுள் வருந்தினார், இதயத்தில் துயருற்றார் என்று எழுத்தாளர் கூறுவதில், கடவுளுடனான தனது உடன்படிக்கைக்கு ஏற்ப வாழத் தவறிய படைப்பு மற்றும் மனிதகுலத்துக்கு எதிராக கடவுள் எதிர்மறை தீர்ப்பு வழங்கினார் என்பதைக் கூறுகிறார். எனினும், இந்த தீர்ப்பு எதிர்நோக்கை இழக்குமளவு தண்டனைகளில் ஒன்றல்ல; பதிலாக, உலகத்தின் நிலை பற்றிய ஒரு உண்மையான மற்றும் நேர்மையான தீர்ப்பாக அது இருந்தது. உலகத்தை, மேலும் குறிப்பாக மனிதர்களை கடவுள் கைவிட்டு விட்டார் என்பதும் இதன் பொருளாகாது.

15. பாபேல் கோபுரத்தின் தொகைவும், கடவுள் எப்படி இத்தகைய விடயத்தைச் செய்தார் என்ற கேள்வியை எழுப்புகிறது. தொடக்க நூலின் பகுதி, கடவுள் எப்படி மக்களின் மொழியில் குழப்பத்தை ஏற்படுத்தினார் என்பதை தெளிவாக விவரிக்கவில்லை. இருந்தாலும், கடவுளின் ''அனுமதிக்கும் விருப்பம்'' என்று கத்தோலிக்க இறையியல் அழைப்பதே சிறந்தப் புரிதலாக இருக்கிறது. கடவுளின் ''அனுமதிக்கும் விருப்பம்'' என்பதன் பொருள், மக்களின் சொந்த சுதந்திர விருப்பத்தைத் தாண்டி அவர் இதை நிகழ அனுமதித்தாலும், கடவுளின் நோக்கமுள்ள செயலாகக் காணப்படும் ஒரு நிகழ்வாக ஆக்குகிறது. பாபேல் கோபுரத்தின் விடயத்தில், பெருங்கூட்டத்தின் குழப்பத்தை அவர்களது சுதந்திர விருப்பத்தின் காரணமாக

அவர்களது சொந்த பிரிவுகள், மொழிகள், மற்றும் அர்ப்பணிப்புகளில் ஏற்பட்ட வளர்ச்சியாகப் புரிந்து கொள்ளலாம். கடவுள் அனுமதிப்பதில் செயல்களை, ஆனால் நேர்மறையாக மற்றவரால் செய்யப்பட்டவற்றை அவருக்குச் சாற்றுவதில், வழக்கமாக இந்த இலக்கிய கட்டமைப்பை பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பயன்படுத்துவதாகத் தோன்றுகிறது. தங்கள் வாழ்வில் அவர்கள் கடவுளை உணர்ந்து கொண்டதற்கு ஏற்ப அவர்கள் பழைய ஏற்பாட்டை எழுதியதால், இதை அந்தப் புரிதல், பண்பாடு மற்றும் தொடர்பு முறைகளின் ஒளியில் நாம் விளக்க வேண்டும்.